
காஞ்சி

# நாடு



தமிழ்நாடு : அவண...
சென்னை - 600 00..

## அறிஞர் அண்ணாவின் வாழ்த்து!

வாழ்த்து.

பொலிவு பொங்கிடும்
பொங்கற் புதுநாளில்
மகிழ்வு பொங்கிடுமே, நின்
மனையுளார் அனைவர்க்கும்;
என் வாழ்த்துதனை அதற்கு
தொகுத்திட இயல்வதற்கு
வழங்கி மகிழ்கின்றேன்,
வாழிய நீ என்றென்றும்.
வாழ்வும் வளமும் மங்காத
தமிழ் என்பார்
தமிழ் வாழ நாம் வாழ்வோம்
அறிவாய் நன்றாய்.
நாம் வாழ்வில் பெறும் இன்பம்
செம்பாகிடல் வேண்டும்
நாட்டினருக்கு.
'தை'யதனில் காணும் செல்வம்
நமக்கென்றே கொண்டாரோ
உழவர் பெருமக்கள்!
நானிலத்தில் நாம் அளிக்கச்
செல்வம் கொள்வோம்;
நல்லறமும் இதுவே என்ற நம்பி!
நான் வாழ்த்துகின்றேன், உன்
வெற்றிக்காக!

அண்ணாதுரை

1965

சிறப்பாசிரியர்:
டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

4372

Ro

ACL-TNAL
03374

JL
ஈ211, N92KN.
N94.1.1.
217216.

# அண்ணா பற்றாளர்களுக்கு வேண்டுகோள்

## பேரறிஞர் அண்ணாவின் நூல்கள்

### தொகுப்பு - திட்டம்

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், கதைகள், கட்டுரைகள் நாடகங்கள், தம்பிக்கு கடிதங்கள், மிக சிறந்த முறையில் என்றென்றும் போற்றி பாதுகாக்கின்றன வகையில் 700 பக்கங்களுக்கு குறையாமல் நல்ல தரமான தாளில், வண்ண அட்டையுடன் வெளிவர இருக்கிறது, முதல் தொகுப்பு விரைவில் வெளிவருகிறது. ஒரு தொகுப்பின் விலை ரூ. 150/- பதினைந்து தொகுப்புகள் வர இருக்கின்றன. ஒரு திங்களுக்கு ஒரு தொகுப்பு என்கிற வகையில்! ரூ. 150/- முன்பணம் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும், 1000 புத்தகங்கள் மட்டும் வெளியிட திட்டமிட்டுள்ளோம். ஆகையால் விரைவில் உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளவும்,

பின் குறிப்பு: காசோலை பணவிடை அனுப்பவேண்டிய முகவரி,

**பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை,**

7, அவின்யூ சாலை,

சென்னை-600 034.

தமிழ் நாடு,

தென் இந்தியா,

---

விளம்பரக் கட்டணம் — காஞ்சி நாடு

அரைப்பக்கம்-ரூ. 250 அட்டை (உள்ளே) 750 முழுப்பக்கம் ரூ. 500,

அட்டை (வெளியே) 1000,

---

காஞ்சி நாடு: உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?

உங்கள் உறுப்பினர் கட்டணத்தை புதுப்பித்து விட்டீர்களா?

# காஞ்சி நாடு

திருவள்ளுவர் ஆண்டு 2025 7—1—94 சுறவம் (தை)

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் திங்கள் இதழ்

பொங்கல் வாழ்த்து!

தமிழ் புத்தாண்டு வாழ்த்து!

தை பிறந்தது தமிழ் புத்தாண்டும் பிறந்தது அன்பு நெஞ்சங்களுக்கு தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்! பொங்கல் வாழ்த்துக்கள்!

பேரவை நண்பர்களுக்கு இந்த நேரத்தில் வேண்டுகோள். 'காஞ்சி நாடு' இதழ் வளர்ச்சிக்கு உதவுங்கள். இதழ் விற்ற பணத்தை உடன் அனுப்பி 'காஞ்கி நாடு' தொய்வில்லாமல் நடைபெற உதவுங்கள் உறுப்பினர்களைச் சேருங்கள். விளம்பரம் வாங்கித் தந்து உதவுங்கள் அறிஞர் அண்ணாவின் தொகுப்பு விரைவில் வர உதவுங்கள்,

இந்த புத்தாண்டில் புது உற்சாகத்துடன் பேரவை வளர்ச்சிக்கும், 'காஞ்சி நாடு' இதழ் வளர்ச்சிக்குப் பாடுபடுங்கள்.

---

மனித மேம்பாடே என் இயக்கம்!

தோழமையே என் மேடை!

—அறிஞர் அண்ணா

# திரட்டு

## இட ஒதுக்கீடு - மாநாடு

அனைத்திந்திய விகிதாசார இட ஒதுக்கீடு மாநாடு அண்ணா அறிவாலயம் கலைஞர் திருமண மண்டபத்தில் 27 - 12 - 93 அன்று நடந்தது. தி.மு.க. தலைவர் கருணாநிதி மாநாட்டை தொடக்கி வைத்தார். மார்க்சிய பெரியார் பொதுவுடைமை கட்சி செயலர் வெ. ஆனைமுத்து முன்னிலை வகித்தார். முன்னாள் எம்.பி. ராம் தவதேஷ் சிங் தலைமை தாங்கினார். மா முத்துசாமி வரவேற்றார் முஸ்லீம்லீக் தலைவர் எம்.ஏ. லத்தீப், விடுதலை குயில்கள் அமைப்பாளர் சுப. வீரபாண்டியன், பா.ம.க. இரா. எழில்மலை ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

—※—※—※—
※—※
※

## திருச்சியில் தி மு க பொதுக்குழு

திருச்சியில் நடைபெற்ற வை கோ. ஆதரவு பொதுக்குழுவுக்கு செங்கை அண்ணா மாவட்ட தி.மு க. செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம் தலைமைவகித்தார். புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுக்குழு உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்களும் சேர்ந்து 259 பேர் கலந்து கொண்டனர். அவைத் தலைவராக திரு.டி.கணேசன் அவர்களும் பொதுச் செயலாளராக திரு.வை.கோபால் சாமியும், பொருளாளராக திரு கண்ணப்பன் அவர்களும் துணைப் பொதுச் செயலாளர்களாக திரு. பொன். முத்துஇராமலிங்கம், திரு. செஞ்சி, இராமசந்திரன், கவிஞர் குடியரசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15ல் தொடங்கி 22 வரை ஒரு வாரகாலம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவுடன், மாநில



217216.
சென்னை-600 008

சுயாட்சி வாரம் என்றும் சிறப்பித்துக் கொண்டாடுவது என பொதுக் குழு தீர்மானம் நிறைவேறியது.

அதேபோன்று தலமை கழத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து கலைஞர் அவர்களும், பொது செயலாளர் பொறுப்பில் இருந்து பேராசிரியர் அவர்களும், பொறுளாளர் பொறுப்பிலிருந்து சாதிக் அவர் களும், துணைப்பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து ஆற்காடு வீராசாமி அவர்களும், அனைத்து அணிச்செயலாளர்களும் அவரவர் பொறுப்பிலிருந்து இன்றுமுதல் விடுவிக்கப் படுகிறார்கள் என்றும் பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றிற்று.

## பாராளுமன்றம் முன் பா.ம.க. போராட்டம்

69 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்திருத்தம் கோரி பாராளுமன்றம் முன் பா ம.க. போராட்டம் நடத்தும் என்று அதன் திறுவனர் டாக்டர். ராமதாஸ் கூறினார்.

## உலகப் படவிழாவை புறக்கணிப்போம் இயக்குனர் பாரதிராசா எச்சரிக்கை

கல்கத்தாவில் நடைபெறும் உலகப்பட விழாவில் உலகம் போற் றும் ஒப்பற்ற கலைஞர் சிவாஜிக்கு அளிக்கப்படும் சிறப்பு பரிக்கப் பட்டால் உலகப்பட விழாவை புறக்கணிப்போம என்று இயக்குனர் பாரதிராசா எச்சரித்து உள்ளார்.

சிவாஜி எனும் மகாகலைஞனுக்கு மரியாதை தரப்படுவதை வங்க மண்ணில் சிலரின் மனம் ஒத்துக் கொள்ளவில்லை என்றால், தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்க அவர்கள் தயாராகுகிறார்கள் என்றுதான் அர்த்தம் என்றும் அறிவித்திருக்கிறார்.

---

நீண்ட பேச்சினால் அல்ல, நாசுக்கான அரசியலால் அல்ல உயிரை இழக்கவும் தயாரக இருந்த உத்தமர்கள் சிந்திய ரத்தத்தால் தான், உலகிலே எந்த உன்னதமான கொள்கையும் நிலை நாட்டப் பட்டிருக்கிறது.

*அறிஞர் அண்ணா*

JL



அ811,N92KN
N94.1.1.

# தாத்தா வழிநடந்து தமிழ் போல் வாழ்க!

❋ அண்ணா இருந்து
முன்னால் நின்று
கண்ணான பெயர்த்தி
கல்யாணம் தன்னை
நடத்தியிருந்தால்
நடைபெறும் சிறப்புகள்
நம்மைக் கவருமோ
அப்படி அல்லவா
அமைந்தது திருமணம்!

❋ பரிமளம் அவர்களின்
பன்னீர் குணங்கள்
வினயம் இல்லாத
விரிஇதழ் பேச்சு
சில்லுத் தேங்காய்
வெள்ளைச் சிரிப்பு
நட்டபுன் எவரையும்
நாடி இழுத்திடும்
நல்ல குணங்கள்

❋ இந்தக் குணங்களின்
எழில் நிறை சாயல்தான்
இளவரசி - முத்துக்குமார்
இனிய திருமணம்!

❋ அண்ணா இல்லத்து
அன்றில் பறவைகள்
பொன்னாய் மிளிர்ந்து
பொழுதாய் ஒளிர்ந்து
தம்பிக்கு எழுதிய
தமிழ் மடல் போன்று
நின்று சிறந்து
என்றும் வாழ்ந்திட
இதயத்து மலர்களை
இல்லத்தில் குவிக்கிறேன்.

❋ தாத்தா அண்ணாவின்
தன்வழி நடந்து
★அண்ணியார் வயதினும்
அதிகநாள் வாழ்க!

★அண்ணியர் (ராணி அம்மையார்) — கயல் தினகரன்

# புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!

—பேரறிஞர் அண்ணா

தமிழ்நாட்டு மக்கள் எத்தனையோ பல பண்டிகைகளைக் கொண்டாடலாம்; ஆனால், பொங்கல் மட்டுமே குடும்பத்தில் உள்ள அனைவராலும் கொண்டாடப்படுகிற பண்டிகை முதியோராயினும், இளைஞராயினும், ஏழை உழவராயினும் வசதி படைத்தோராயினும் அனைவரும் கொண்டாடும் திருநாள் இது. இத்திருநாள் உழைப்புக்கு மதிப்புத் தரும் நாள். ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்ளும் ஒத்துழைப்பை வலியுறுத்தும் விழா பொங்கல் விழா!

நாம் எல்லோரும் உரிமையோடு பங்கேற்கும் ஒரு பெரும் திருநாளாகப் பொங்கல் நாள் திகழ்கிறது.

புதிய ஒளியோடு நாம் எல்லாம் ஒருங்கிணைந்திடும் ஒரு வாய்ப்பினைப் பொங்கல் விழா நல்குகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான ஒரு நிறைவான வாழ்வை நோக்கி நடைபோடுவதே நமது குறிக்கோள் ஆகும்!

உற்பத்தியைப் பெருக்கி விநியோக முறையைச் செம்மைப்படுத்தி அதன் மூலம் பொருளாதார நீதியெனும் குறிக்கோள் முழுமைபெறச் செய்யவேண்டும். சுரண்டலும், அடிமைத்தனமும் நீங்கி, வஞ்சகமும் ஏற்றத் தாழ்வுகளும் அகன்று, எல்லோரும் இன்புற்றிருக்கும் வண்ணம் புதியதோர் ஒளி எங்கணும் பரவட்டும்!



மனித சமுதாயத்தின் அல்லலை, விஞ்ஞானம், எந்த அளவு குறைத்திருக்கிறது என்பது பற்றி எண்ணினால் மக்கள் வீழ்ந்து வணங்கவும் செய்வார்கள், விஞ்ஞானத்தின் முன்பு. மனித சமுதாயத்தின் வேதனையை விஞ்ஞானம் அந்த அளவுக்கு குறைந்திருக்கிறது.

— அறிஞர் அண்ணா

# தமிழருக்குத் தமிழ் ஆண்டு, மாதம், கிழமை, எண் எது?

✻ நமது தமிழகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்த நாள் கிழமை, நேரம், மாதம் முதலியவை பற்றிப் பிறப்பியம் (சாதகம்) எழுதி வைத்துப் பாதுகாக்கும் பழக்கம் தமிழர்களிடம் இன்றும் இருந்து வருகிறது.

இவ்விதம் தனி மனித வாழ்க்கையில் தனிக் கவனம் செலுத்திய தமிழர்கள் குடும்பம், குமுகாயம் (சமுதாயம்), நாடு பற்றிய பொது நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு ஆகியவற்றுக்குப் பொதுவான ஆண்டுக் கணக்கால் எழுதும் வழக்கத்தை ஏனோ பின்பற்றவில்லை!

நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பொதுவான தொடர் ஆண்டால் காலத்தைக் கணக்கிடல் வேண்டும் என்ற கருத்துடையவர் களாகப் பழந்தமிழ் அரசர்கள் இருந்திடவில்லை. தமிழ்ச் சான்றோர்கள் அதன் இன்றியமையாமையை அரசர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறியதாகச் சான்றுகள் கிடைக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் 'பிரபவ' முதல்' அட்சய வரை உள்ள ஆரிய ஆண்டு முறை புகுந்து விட்டது.

அறுபது ஆண்டுகளின் பெயர்களில் ஒன்று கூடத் தமிழ் இல்லை 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கணக்கிடுவதற்கு உரியதாக இல்லை. அதற்கு வழங்கும் கதையோ ஆபாசமாக இருக்கிறது. அறிவுக்கும் அறிவிய லுக்கும் காலத்திற்கும் கருத்திற்கும் பொருத்தமாக இல்லை.

இவ்வாறு தமிழருக்குத் தமிழில் தொடர் ஆண்டு இலலாத குறையை உணர்ந்த தமிழ் அறிஞர்கள் சான்றோர்கள், புலவர்கள் ஆகியோர் 1921 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது என்றும் திருவள்ளுவர் காலம் கி. மு. 31 என்றும் முடிவு செய்தார்கள்.

இவ்வாறு முடிவு செய்தவர்களில் தலையான தமிழ் அறிஞர்கள் தமிழ்க் கடல் மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு. வி. க.

தமிழ்க் காவலர் சுப்பிரமணிய பிள்ளை, சைவப் பாதிரியார் சச்சிதானந் தம் பிள்ளை, நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் ஆவார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை; இறுதி மாதம் மார்கழி. கிழமைகள் வழக்கில் உள்ளவை. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள்.

ஆங்கில ஆண்டு 31 ஐக் கூட்ட வருவது திருவள்ளுவர் ஆண்டு. 1995 + 31 = 2024 தமிழ் நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ் நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ் நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ் நாடு அரசின் அனைத்து அலுவல் களிலும் பின்பற்றி வருகிறது.

※ பன்னிரண்டு ஓரைப் (ராசி) பெயர்களே பன்னிரண்டு மாதங் களின் பெயர்களாக வழங்கி வந்தன. அவை: (1) சுறவம் (தை), (2) கும்பம் (மாசி), (3) மீனம் (பங்குனி) (4) மேழம் (சித்திரை) (5) விடை (வைகாசி), (6) ஆடவை (ஆனி), (7) கடகம் (ஆடி), (8) மடங்கல் (ஆவணி), (9) கன்னி (புரட்டாசி) (10) துலாம் (ஐப்பசி), (11) நளி (கார்த்திகை), (12) சிலை (மார்கழி), இவை இன்றும் மலையாள நாட்டில் மாதங்களாகப் பின் பற்றப்படுகின்றன. தமிழ் நாட்டில் ராசி என்னும் பெயரில் இப்பொழுதும் வழக்கில் உள்ளன.

(1) மேசம் (2) ரிசபம் (3) மிதுனம் (4) கடகம் (5) சிம்மம் (6) கன்னி (7) துலாம் (8) விருச்சிகம் (9) தனுசு (10) மகரம் (11) கும்பம் (12) மீனம் என்னும் பன்னிரண்டு ராசி (ஓரை) களில் கடகம், கன்னி, துலாம், கும்பம், மீனம் ஆகிய ஐந்தும் தமிழ்ப் பெயர் களே. மேசம், ரிசபம், மிதுனம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மகரம் ஆகிய ஏழு பெயர்களும் தமிழிலிருந்து வடமொழிக்கு மாற்றம் செய்யப் பட்டு விட்டன. அவை முறையே மேழம், விடை, ஆடவை, மடங்கல், நளி, சிலை, சுறவம் என்று தமிழில் மீட்கப்பட்டுள்ளன. அதனால் இந்த மாதங்களைப் பின் பற்றுவதும் நினைவில் வைத்துக் கொள்வதும் எளிமையாகும்.

ஓரைப் (ராசி) பெயர்களால் மதங்களை அமைத்திருப்பது தமிழரின் வானியல் அறிவுக்கு இன்றும் அறிவியல் சான்றாக விளங்குகிறது.

சித்திரை முதல் பங்குனி வரை உள்ள மாதங்களின் பெயர்கள்

தமிழிலிருந்து வடமொழிக்கு மாற்றப்பட்டன என்று தமிழ் அறிஞர்களும் வடமொழியிலிருந்து தமிழுக்கு மாற்றப்பட்டன என்று வடமொழி வாணர்களும் வாதிட்டு வருகின்றனர் (எடுத்துக்காட்டு: சித்திரை. சைத்ரா; வைகாசி-வைசாக; கார்த்திகை-கார்த்திகா)

மொழி ஞாயிறு பாவாணர் அயராது ஆராய்ச்சி செய்து சித்திரை முதல் பங்குனி வரை உள்ள 12 மாதங்களின் பெயர்களும் தமிழ் இல்லை என்றும் மேழம் முதல் மீனம் வரை உள்ள 12 ஓரை (ராசி) களே 12 தமிழ் மாதங்களாகப் பின்பற்றல் வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

☀ ஏழு கிழமைகளில் புதன், சனி தவிர மற்றவை தமிழ்ப் பெயர்களே. புதன் அறிவன் என்றும் சனி காரி என்றும் வழங்கப்படுகின்றன-

☀ 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என இன்று உலகம் எங்கும் எழுதப்படும் எண்கள் அரபி எண்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அராபியர்களுக்கு இந்த எண்களின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள். வட நாட்டு அறிஞர்களுக்கும் இவற்றின் தோற்றம் பற்றி ஒன்றும் விளங்கவில்லை. தமிழ் நாட்டின் பழைய எண் வடிவங்களைப் பற்றி அறியாமல் இருத்தலே இவ்வாறு அனைவரும் தடுமாறுவதற்குக் காரணம் ஆகும்.

அரபி எண்கள் என்றும் இந்திய எண்கள் என்றும் இவ்வாறு தடுமாறிக் கூறப்படும் அந்த எண்கள் (1,2,3, முதலியவை பழைய தமிழ எண்களே என்பது பின் வரும் பழந்தமிழ் எண்வடிவங்களைக் கண்டு உணரலாம்.

இவற்றை நோக்கி எண்ணவல்லவர்க்கு 1,2,3, முதலிய எண்களின் எழுத்து வடிவம் தமிழகம் உலகிற்கு அளித்த கலையே என்னும் உண்மை புலப்படும் என்று மூதறிஞர் மு. வரதராசனார் கூறுகிறார்.

நாம் புதிதாக எதையும் புகுத்தவில்லை. இடைச் செருகலை அகற்றி இழந்ததை மீட்டு நடைமுறைக்குக் கொண்டு வருகின்றோம்.

தமிழர்களிடம் வழிபடுவது, வணங்குவது. எழுவது, பேசுவது மிகுதியாகவும் போற்றுவது, பின்பற்றுவது, செயல்படுவது குறைவாகவும் இருக்கின்றன. தனித்தனியாக உயரும் பண்பாடு மிகுதியாகவும் கூட்டாகவும் ஒன்று சேர்ந்து உயரும் பண்பாடு குறைவாகவும் உள்ளன. தனிமரம் தோப்பு ஆகாது என்பது பழமொழி.

மன்னர் ஆட்சியில் இவை குறையாகத் தெரியவில்லை. மக்களாட்சியில் எண்ணத்திற்கு எண்ணிக்கை பலம் தேவைப்படுவதால் வெற்றி

வாய்ப்பை இழக்கிறோம். செல்வாக்குப் பெறமுடியவில்லை. உலகம் அறிய வாழ இயலவில்லை. பல வகையிலும் துறையிலும் பாதிக்கப்படு கின்றோம்.

தொடர் ஆண்டைப் பொறுத்த வரை கூட வள்ளாலர் ஆண் பெரியார் ஆண்டு, அண்ணா ஆண்டு, பாரதிதாசன் ஆண்டு, கலைஞர் ஆண்டு, அம்பேத்கர் ஆண்டு, என்று பலவாறாக அவரவர் விருப்பம் போல் பின்பற்றி வருகின்றனர்.

செய்யத்தக்கவை என்று சான்றோர்கள் புகழ்ந்து கூறியவை களைக்கடை பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந் தவருக்கு எப்பொழுதுமே நன்மை இல்லை என்பது வையம் புகழ் வள்ளுவர் வாய் மொழியாயாகும்

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்." —திருக்குறள்

எனவே, தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு ஆகியவற்றின் நலனும் வளனும் பெருமையும் புகழும் நாடுவோர் அனைவரும் திருவள்ளுவர் ஆண்டு, சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை ஆகிய பன்னிரன்டு மாதங்கள், ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி, ஆகிய ஏழு கிழமைகள், மேற்குறிப்பிட்ட இருவகை எண் வடிவங்கள் ஆகிய வற்றைத் தம் வாழ்வில், வழக்கில் பின்பற்றவும் பரப்பவும் போற்றவும் வேண்டுவது தமிழரின் தலையாய கடமையாகும்.

இங்ஙனம்,
வ வேம்பையன்
அமைப்பாளர்,
கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்.
கல்பாக்கம் பகுத்தறிவாளர் கழகம்.

தொல்காப்பியர் இல்லம்,
4' மூன்றாம் நிழற் சாலை,
அணுவாற்றல், நகரியம்,
கல்பாக்கம்-603102.

---



பாலாடையில் பருகிய குழந்தை, பிறகு கோப்பை தேடும் குமரன் ஆகிறான். தொட்டி யில் இருந்த பிறகு கட்டிலிலும் ஏறவேண்டி வருகிறது. அவை போலத்தான் பழையன கழித லும் புதியன புகுதலும் வழு அல்ல—அது கால வகை.

—அறிஞர் அண்ணா

# சட்டம் - நீதி - செயற்பாடு

—மு. வயலூர்க்குமரன்

'வட்டாட்சியரை அவரது அலுவலகத்தில் புகுந்து ஆளுங்கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் அடித்து உதைத்தார்'

காரணம்?

சட்டப் பேரவை உறுப்பினர், விதிமுறைகளுக்கு மாறான சில காரியங்களைச் செய்து தருமாறு வட்டாட்சியரிடம் பல முறை கூறியும் அவர் செய்து கொடுக்க மறுத்து விட்டார்.

'பொறியாளரை, அவரது அலுவலக அறைக்குள் நுழைந்து ஆளுங்கட்சியின் சட்டபேரவை உறுப்பினர் வெறித்தனமாகத் தாக்கினார்.'

காரணம்?

அரசுக்கு ஒரு பணியைச் செய்து முடிக்க ஒப்பந்தக்காரர்களைத் தேர்வு செய்து ஒப்படைததார். ஆனால் ஆளுங்கட்சியின் சட்டபேரவை உரிப்பினரிடம் அனுமதி பெறவில்லை.

'காவல் நிலையத்திற்குள் ஆளுங்கட்சியின் மாவட்டச் செயலாளர் புகுந்து, அங்கிருந்த ஆய்வாளரை மிரட்டி, ''நடப்பது எங்கள் ஆட்சி. எங்கள் கட்சிக்காரன் மீது எந்த வழக்கும் போடக் கூடாது'' என்று கூறிக் காவலில் வைக்கபட்டிருந்த கட்சிக்காரனை வலுக்கட்டாயமாக விடுவித்துக் கொண்டு போனார்.'

'ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது ஆளுங்கட்சியில் பதவியிலும் பொறுப்பிலும் இருப்பவர்களுக்கு இவ்வளவு சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும்.'

அரசு மட்டத்திலிருந்து துறைத் தலைவர்களுக்கும் மாவட்ட அலுவலர்களுக்கும் இப்படித் தகவல் தரப்பட்டுள்ளது.

'எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அரசு அலுவாலர்களிடம் என்ன காரியம் வேண்டிச் சென்றாலும் அதனைச் செய்து கொடுக்கக் கூடாது.'

இப்படியும் அரசு மட்டத்திலிருந்து துறைத் தலைவர்கள் மாவட்ட அலுவலர்களுக்குத் தகவல்.

இவ்வாறெல்லாம் செய்திகளை நாம் இப்போது அடிக்கடி கேள்வி படுகிறோம். இதற்கு என்ன காரணம்?

அரசு அலுவலர்கள் என்போர், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற, சட்டபேரவை உறுப்பினர்கள், கட்சிப் பதவியிலுள்ளோர் ஆகியோர் எதைச் சென்னாலும் அதைச் செய்து முடிக்கக் கடமைப்பட்ட அடிமைகள் என்ற எண்ணம் அரசியல்வாதிகளிடையே வலுவடைந்து வருவதாகத் தோன்றுகிறது.

ஆளுங்கட்சியின் நிகழ்ச்சிகளுக்குக் கூட, பல்வேறு அரசுத் துறையைச் சார்ந்தவர்களும் பல்வேறு வகையில் ஏற்பாடுகள் செய்து தர வேண்டியது அவர்களுடைய கடமை என்ற எண்ணமும் அவற்றைக் கேட்டுப்பெறுவது தங்களுடைய உரிமை என்ற எண்ணமும் ஆளுங் கட்சியினரிடையே உறுதியாக நிலைத்திருப்பது போல் தோன்றுகிறது

இவ்வாறெல்லாம் கட்சிப் பணிகளுக்கு அரசின் பொருட்களையும் வசதிகளையும் அலுவலர்களையும் பயன்படுத்துவது பெருந்தவறு என்பது விவரமறிந்தோர் சிலருக்குப் புரியத்தான் செய்கிறது. எனினும், ''நாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். நம்மை எவன் கேட்க முடியும்?'' என்ற ஆணவம் அவர்களின் அறிவை மறைக்கிறது.

அரசு அலுவலர்களைத் தவறு செய்ய வற்புறுத்துவதும், அரசின் பொருட்களைக் கட்சிக்காகப் பயன்படுத்துவதும் சட்டவிதிகளுக்கு முரணான செயல்கள் என்பதைக் கட்சிக்காரர்களுக்கு விளக்கிக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கட்சியின் தலைவர்களுக்குத் தோன்றவில்லையா? அல்லது, கட்சிக்காரர்கள் முடிந்த மட்டும் கொள்ளையடித்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டார்களா?

எப்படி எடுத்துக் கொள்வதென்று தெரியவில்லை.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி, சட்டமன்றம், நீதி மன்றம், செயற்பாட்டு மன்றம் என்ற மூன்று அமைப்புகளின் மொத்த வடிவம் தான் ஆட்சி என்பதாகும்.

இந்த அமைப்பு ஒவ்வொன்றும் தன்னிச்சையாகச் செயற்படக் கூடிய உரிமை படைத்தவையாகும். அதாவது, ஓரமைப்பின் பணிகளில் மற்ற அமைப்புகள் தலையிட முடியாது.

சட்டமன்றம் (LEGISLATURE) என்பது மக்களின் சார்பாளர்கள் - அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட அமைப்பாகும். இங்கு மக்களின் நன்மைக் கருதிச் சட்டங்கள் இயற்றப் படுகின்றன. மக்களின் நல்வாழ்வுகான திட்டங்கள் தீட்டப்படுகின்றன திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பல்வேறு அரசுத்துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றம் (JUDICIARY) என்பது சட்டங்கள் மீறப்பட்டுவிட்ட தாக வழக்குகள் வரும்போது அவற்றின்மீது தக்கமுறையில் விசாரணை நடத்தி நீதி வழங்கும் அமைப்பாகும். இந்த அமைப்பில் உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் சட்டமன்றங்களால் இயற்றப்பட்டசட்டங்கள் அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்குட்பட்டு அமைந்துள்ளனவா என்று ஆய்வு செய்யவும், அவ்வாறில்லையெனில் அந்தச்சட்டங்களையே செல்லாதெனத் தள்ளுபடி செய்யவும் அதிகாரம் படைத்தவை.

செயற்பாட்டுமன்றம் (EXECUTIVE) என்பது அரசு எடுக்கும் முடிவுகளையும், வகுக்கும் திட்டங்களையும் நிறைவேற்றிச் செயலாக்கும் கடமையும் பொறுப்பும் கொண்ட அமைப்பாகும். பல்வேறு சட்ட விதிகளின் அடிப்படையில் இந்த அமைப்பின் செயற்பாடு இருக்கும்.

ஆட்சியின் இந்த மூன்று கிளைகளும் தனித்தனியான பொறுப்பு களைக்கொண்டவை. ஓரமைப்பின் பொறுப்புகளில் மற்றோரமைப்பு தலையிட முடியாது - தலையிடக் கூடாது.

முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் என்போர் சட்டமன்றக் கிளையைச் சார்ந்தவர்கள்.

அரசு அலுவலர்கள் என்போர் செயற்பாட்டு மன்றம் கிளையைச் சார்ந்தவர்கள். அரசு அவர்களின் பணிகளைக் கண்காணிக்க அந்த அமைப்பிலேயே வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன சட்டமன்றக் கிளையைச் சார்ந்தவர்கள் செயற்பாட்டு மன்றக் கிளையின் பணிகளில் தலையிட அதிகாரமில்லை.

ஒரு திட்டம் சரியாக நிறைவேற்றப் படவில்லையென்ற குற்றச் சாட்டு அமைச்சரவையின் கவனத்திற்கு வருமானால், முதலாமைச் சரோ, துறையின் பொறுப்பை வைத்துள்ள அமைச்சரோ தொடர்புள்ள துறையின் தலைமை அலுவலரைத்தான் தொடர்பு கொண்டு, விவரங் களைக் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க ஆணையிடவேண்டும். அடிமட்டத்தில் பணியாற்றும் சிறிய அலுவலருடன் அமைச்சர்களோ சட்டப்பேரவை உறுப்பினர்களோ நேரிடையாகத் தொடர்பு கொள் வதோ கண்டிப்பதோ மரபல்ல. அது முறையுமாகாது.

மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்யும்போது, முதலமைச் சரோ, அமைச்சர்களோ மாவட்ட அளவிலான அலுவலர்களிடம் கலந் துரையாடலாம். திட்ட நிறைவேற்றங்கள் குறித்துக் கேட்டறியலாம். ஆய்வுரைகள் கூறலாம். ஆனால் அலுவலகங்களில் சென்று சோதனை யிடவோ, பதிவேடுகளையும் பிற ஆவணங்களையும் ஆய்வு செய்யவோ அமைச்சர்களுக்கு அதிகாரமில்லை.

அமைச்சர்களுக்கே அதிகாரமில்லையெனும் போது சட்ட பேரவை உறுப்பினர்களோ ஆளுங்கட்சிப் பதவிகளில் இருப்போருக்கோ எங்கிருந்து அதிகாரம் வரும்?

சட்டப் பேரவை உறுப்பினர்கள் என்போர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மக்களுடைய பொதுவான நன்மை கருதி, மக்களின் தேவைகளையும், தொகுதியில் நிறைவேற்றப் படவேண்டிய திட்டங்களையும் சட்டப் பேரவையில் எடுத்துக் கூறுவதுதான் அவர்களது தலையாய கடமை. வேண்டுமானால் தொகுதி மக்களின் நன்மைக்கான பிரச்சனைகளை உரிய அலுவலரின் பார்வைக்குக் கொண்டு சென்று அவற்றை விரைவில் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்.

இதையெல்லாம் விட்டு விட்டு, சட்டப்பேரவை உறுப்பினரென்றால் அந்தத் தொகுதிக்கே நான் தான் மன்னன் அல்லது அரசி என்று தவறாகக் கற்பனை செய்து கொண்டு, தனது சொந்த ஆதாயத்திற்காக அரசு அலுவலர்களைத் தாக்குவது திட்டுவது, மிரட்டுவது போன்ற காரியங்களை சட்டப் பேரவை உறுப்பினர்களோ, ஆளுங்கட்சியின் பெரும்புள்ளிகளோ அல்லது அமைச்சர்களோ செய்கின்ற நிலை நீடிப்பது குடியாட்சித் தத்துவத்தின் நெறிமுறைகளுக்கு ஏற்றதல்ல, அது பொது வாழ்க்கையின் தரத்தைக் குறைத்து விடும்.

எனவே வாழ்வின் தூய்மை கட்டிக்காக்கப் படவேண்டுமெனக் கருதுகிற நல்லோர் பலரும் ஒன்று சேர்ந்து, அதற்காக ஓர் இயக்கமே நடத்துவது நலம் பயக்கும்.

மக்களுக்கு தொண்டாற்றுவதே இறைவனுக்குச் செய்யும் வழிபாடு என்ற உயரிய நோக்கங் கொண்டோர் பொது வாழ்வுக்குப் பெருமளவில் வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது நாட்டுக்கு நலந் தரும்.



ஜாதியினால் விளையும் கேடுகளை அறிய முடியாத பாமரர்களைவிட அதனை அறிந்திருந்தும், தமக்குச் சுகவாழ்வு கிடைக்கிறது ஜாதி இருப்பதினால் என்ற காரணத்துக்காக, ஜாதி முறையைத் தங்கள் செல்லப் பிள்ளையாகக் கொள்ளும் படித்தவர்கள் தான் மிகப் பொல்லாதவர்.

— அறிஞர் அண்ணா

# மொழி-கலை-இலக்கியத் துறையில் அண்ணாவின் அரும்பணி

தமிழிலக்கிய உலகில் அண்ணாவின் சாதனைகள் பிரமிக்கத் தக்கவை. கவின்மிக்க சட்டுரைகளால் ஆங்கில உரைநடையை அழகு படுத்தியவன் எடிசன். எதுகையும் மோனையும் எழில்பட அமைத்து வரலாற்று நூலை இலக்கியமாக்கித் தந்தவன் கிப்பன். நாடகத்தைப் பயனுள்ள கவியாக்கி மக்களைச் சிந்திக்க வைத்தவர்கள் பர்னாட்சாவும் ஆஸ்கார் ஒய்யில்டும். மேடைப் பேச்சில் இலக்கியம் படைத்தவன் வின்ஸ்டன் சர்ச்சில்; உரையாடலை, இலக்கிய அந்தஸ்த்திற்கு உயர்த்தியவன் ஒஹென்றி. இத்தனை பேரும் சேர்ந்து ஆங்கில மொழிக்கு செய்த சேவையை, தனி மனிதராக நின்று தன் பேனா முனையில் வலிமையால் பேச்சாற்றலின் திறத்தால் தமிழ்மொழிக்குச் செய்து காட்டிய மேதை அண்ணா அவர்கள். தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்பட்டால் அண்ணாவின் சேவை அதில் அத்தியாயமாகவல்ல, ஒரு பாகமாகவே அமையும்.

பி. சி. கணேசன் பி. எஸ். சி., பி. எட்.
முரசொலி அண்ணாமலர் 1959.

அறிஞர் சி.என். அண்ணாதுரை, டி கே. சீனிவாசன், கலைஞர் கருணாநிதி ஆகியோர் தங்கள் நோக்கில் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைச் சிறு கதையில் புகுத்தினார்கள். இவர்கள் கருத்துப் பிரச்சார அளவில் பெற்ற வெற்றியைக் கலையாக்கும் என்ற அளவிலும் பெற்றமை பாராட்டுக்கு உரியது. அறிஞர் அண்ணாதுரையின் 'கடு முஞ்சி' 'உண்ணாவிரதம் ஒரு தண்டனை' போன்ற சில கதைகள் என்றும் நினைவில் நிற்க தக்க வடிவ வமைப்புப் பெற்றவை.

இருபதாம் நூற்றாண்டில் சிறுகதை சாலை 'இளந்திரையன்'.

சமூக விடுதலை இயக்கத்திற்காக, சி. என். அண்ணாதுரையும் தம் சிறு கதைகளைக் கருத்துக் கணைகளாக்கியிருக்கிறார், சாதி ஒழிப்பு, கைம்பெண் மறுமணம், சம்பிரதாயச் சடங்குகளின் மறுப்பு போன்றவை சி.என். அண்ணாதுரையின் சிறு கதைகளில் தலை தூக்கி நிற்கின்றன.

தமிழ் சிறு கதையின் தோற்றமும் வளர்ச்சியும் 'அகிலன்'.

திரு. அண்ணாதுரை ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த பேச்சாளர் நல்ல தமிழ் எழுத்தாளர் அவரது பேச்சு எழுத்து வன்மையினால் தி.மு.கழகம் படிப்படியாக வளர்ச்சி கண்டது. அவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். அவற்றில் நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள். மக்களின் மாண்புமிகு தலைவராக இருந்தவர். தமது நாவன்மையால் திரளான கூட்டத்தை தப்பால் வசீகரிக்கும் ஆற்றல் படைந்திருந்தார், அவரது பேச்சை மக்கள் மெய்மறந்து கேட்பார்கள். தமிழ்நாட்டில் தி.மு க. ஆளும் கட்சியாக மாற திரு. அண்ணாதுரையின் சிறந்த தலைமையும் பேச்சுவன்மையும் பேருதவி செய்துள்ளன.

தினமணி 3—2—69.
தொகுப்பு.
இரா கு இராமசாமி
இராவத்தூர், கோவை மாவட்டம்-641 103.

---

# வள்ளுவரின் குறள்

—தந்தை பெரியார்

---

''அறிவினால் உய்த்துணர்ந்து, ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இணைந்திருக்கக் கூடியனவும் ஆனகருத்துக்களைக் கொண்டு இயங்குகிறது வள்ளுவரின் குறள்.

''மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி ஊட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவே தான் எல்லா மக்களும், எல்லா மதத்தவரும், ''எங்கள் குறள்'' ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

''மூடநம்பிக்கை யொழிந்து, அறிவு செம்மைப்பட திருக்குறள் சம்மையான வழிவகுத்துக் கொடுக்கும். குறள் கருத்துக்கள் நன்கு நாடெங்கும் பரப்பப்படுதல் வேண்டும். கல்வி என்றாலே 'திருக்குறள் கல்வி; அறிவு என்றாலே 'திருக்குறள் அறிவு' என்றுதான் கருதப்பட வேண்டியுள்ளது.''

# அண்ணாவின் மேடைத் தமிழ்

— அ. கி. மூர்த்தி

## 7. அண்ணாவின் பேச்சுக்கள் எழுத்துக்கள் பற்றிய வெளியீடுகள்.

தம் பேராற்றலை வெளிப்படுத்த அண்ணா பேசியது போல் எழுதியது போல் இந்த உலகில் எவரும் பேசியதில்லை எழுதியதில்லை. ஒருவர் ஒரு துறையில் தான் வல்லவராக இருப்பார். ஆனால் அண்ணாவோ பல்துறை வித்தகராக விளங்கினார். இவ்வுண்மையை அவர்தம் பேச்சுகளும் எழுத்துகளும் உலகிற்கு என்றும் பறைசாற்றும்.

### வெளியீட்டாளர்கள்

அண்ணாவின் பேச்சுக்களையும் எழுத்துகளையும் முதன் முதலில் வெளியிட்டது திருச்சி திராவிட பண்ணையம் அது வரலாற்றுச் சிறப்பிற்குரியதும்.

அடுத்துச் சென்னைம் பாரி நிலையம் அண்ணாவின் குறிப்பிட்ட பேச்சுகளை எழுத்துகளையும் வெளியிடுள்ளது. குறிப்பாக அண்ணாவின் மடல்கள் முழுவதையும் பல தொகுதிகளாக வெளியிட்டு நிறைவு செய்துள்ளது.

சென்னை பரிமளம் பதிப்பகம் அண்ணாவின் சிறுகதைகளை மட்டும் வெளியிட்டுள்ளது. தஞ்சை அண்ணா வெளியீட்டில்லம் அண்ணா அவர்களை பேச்சுகளையும் எழுத்துக்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆராய்ச்சில் பதிப்புகளாக வெளியிட்டு வருகின்றது.

சென்னையிலுள்ள பாரதி புத்தக நிலையமும் மற்றும் பூம்புகார் பிரசுரம் அண்ணாவின் எழுத்துகளை வெளியிட்டு வருகின்றன.

### வெளியீடுகள் — பேச்சுகள்

தமிழ்: 150க்கு மேல் வெளிவந்துள்ளன. இன்னும் வெளிவர வேண்டியவை 200க்கு மேல் இருக்கலாம். அவற்றைத் திரட்டி வெளியிடத் தஞ்சை அண்ணா இலக்கியப்பேரவை டாக்டர் சி. என். ஏ. பரிமளம் அவர்கள் வழிகாட்டுதலுடன் முயன்று கொண்டுள்ளது. முதல் முயற்ச்சியாக அண்ணாவின் தலைமை உரைகள் வெளியிடப்பட்டுள்ளது விரைவில் விற்பனைக்கு வரும்.

ஆங்கிலம்: 1) 1967-69 இக்காலத்திய தமிழ்ப் பேச்சுகள் 128 ஆறு தொகுதிகளாக ஆங்கிலத்தில் தஞ்சை அண்ணா வெளியீட்டில்லம் வெளியிட்டுள்ளது (1970-75).

2) 1962-66: இக்காலத்தில் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய 13 உரைகள் பண்ருட்டியார் அவர்களால் ANNA SPEACHS என்னும் தலைப்பில் ஓரியண்ட் லாங்மன் பதிப்பகத்தார் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

இனி வெளிவர வேண்டிய பேச்சுக்கள் நமக்குள் இருக்கலாம்.

## வெளியீடுகள் — எழுத்துக்கள்

தமிழ்:

1) கடிதங்கள் முடிந்துவிட்டன பல தொகுதிகளாகப் பாரிநிலையம் வெளியிட்டுள்ளது.

2) புதினங்கள் அனைத்தும் வெளிவந்துவிட்டன. கிறுகதைகள் இன்னும் ஒரு சிலவெளிவர வேண்டும்.

3) கட்டுரைகள் பலநிலைகளில் வரவேண்டியவை நிறைய உள்ளன (தலையங்கங்கள், அணிந்துரை, வாழ்த்துச்செய்தி, இரங்கற் செய்தி முதலியன)

4) அண்ணா போற்றிய பெருமக்கள் முதல் தொகுதி மட்டும் தமிழ் நாடு அரசு வெளியீடாக (1988) வெளிவந்துள்ளது.

ஆங்கிலம்

இலக்கிய வரிசையில் இரு நிலைகளில் வெளியிடப்பட வேண்டும்.

I மொழியாக்கம்:

(i) Anna's Play? – One Night

(ii) Anna's Short Store's (13)

(iii) Anna's Novels - Parvathi B. A.

இவை மூன்றும் அ. கி. மூர்த்தி அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடுவதற்கு ஆயத்தமாக உள்ளன. விரைவில் வெளியிடப்படும்.

II ஆங்கிலம் மூலம்

அண்ணா அவர்கள் தாம் துவக்க காலத்தில் ஓம் லேண்டிலும் பின் ஓம் ரூலிலும் எழுதிய எழுத்துகளைப் பின்வருமாறு வெளியிடலாம்.

(i) Anna's Memoroble Editorials - 3 Vols.
(ii) Anna's Epistles - 3 Vols
(iii) Anna's Articlis - 3 Vols.

இவற்றைத்திரட்டி வெளியிட அ. கி. மூர்த்தி அவர்கள் அரிதின் முயன்று கொண்டிருக்கிறார்கள். தலையங்கக் கட்டுரைகளின் முதல் தொகுதி திரட்டப்பட்டு வெளியிடுவதற்கு ஆயத்தமாக உள்ளது. இதுகாறும் கூறப்பெற்றவைகளால் வெளிவராத பேச்சுக்களையும் எழுத்துகளையம் (தமிழ்,ஆங்கிலம் ஆகிய இரண்டும்) வெளியிட வோமாயின், அண்ணாவின் எழுத்துக்கள் பேச்சுகள் பற்றிய ஒரு முழுப்படப் பிடிப்பு நமக்குக் கிடைகக்கும்.

அண்ணாவழி அமைந்த அரசுகள் மூன்றும் மைய அரசு நேருவுக்கும் காந்திக்கும் செய்தது போன்று, மராட்டிய அரசு அப்பேத்கரருக்குச் செய்ததுபோன்று, சோவியத்து அரசு, லெனினுக்குச் செய்தது போன்று அண்ணாவின் பேச்சுகளையும் எழுத்துக்களையும் தொகை வகை செய்து காலவாரியாக வெளியிடாதது கசப்பான வரலாற்றுண்மையாகும்.

## முடிவுரை

இறுதியாக ஒரு வினாவை எழுப்பி இவ்வுரையை நிறைவு செய்தல் நல்லது. அண்ணா ஒரு சிறந்த பேச்சாளரா? இவ்வினாவிற்கே இடமில்லை. 1947 லேயே அவர் ஒரு சிறந்தப் பேச்சாளர் என்பது முடிவான செய்தி. அண்ணா ஒருபிறவிப்பேச்சாளர் ஒப்புவமை கூற இயலாத உலகின் ஒரே பேச்சாளர். இக்கருத்தை சென்னை மவுண்ட் சாலையில் அண்ணா அவர்களின் சிலையைத்திறந்து வைத்துப் பேசினார் சர் இராமசாமி அவர்களும் வழிமொழிந்து உலகின் சிறந்த பேசசாளர் அண்ணா என்று கூறியுள்ளசர்.

அண்ணாவின் சிறப்புகளைக் கூறியும் நேருபெருமகனார் புகழுரையோடும் இவ்வுரை நிறைவு செய்யப்படுகிறது.

### அண்ணா

சரித்திரம் படைத்த சாமான்யர்
மன்பதை போற்றும் மாமேதை
தனக்கென வாழாத் தனிப் பெருந்தகை
நானலம் போற்றும் நாவேந்தர்
சாவினும் சான்றாண்மை காட்டியவர்

அடக்கத்தின் ஆன்ற உருவம்
எளிமையின் ஏற்றல்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு

என்றும் வாழ்க்கை நெறி வகுத்து வாழ்ந்த செம்மல் என்று பலபடக் கூறலாம்.

நாடாளுமன்றத்தில் அண்ணாவின் கன்னிப்பேச்சைக் கேட்ட பின் நேருபெருமகனார் கூறியது; ''இவர் தம் வருகை வரவில் கொள்ளப் படவேண்டியதாகும்,''

தன் தனிப்பெரும் பேச்சாற்றல் எழுத்தாற்றலால் என்றும் மக்கள் உள்ளத்திலும் வாசகர்கள் உள்ளத்திலும் வாழ்பவர் பேரறிஞர் அண்ணா.

[ஏழாம் தொகுதியான இக்கட்டுரையோடு இத்தொடர் முற்றுப் பெறு கிறது)

---

# "பதவிப் பெரியதல்ல"

நான் நெஞ்சில் உள்ளதைக் கூறுகிறேன். கள்ளங் கபடமில்லாமல் கூறுகிறேன். பேச்சுக்குக் கூறவில்லை எந்தப் பலனையும் எதிர் பார்த்துக் கூறவில்லை. மற்றக் கட்சியிலுள்ள எல்லோரையும் மதிககி றேன். மரியாதைக் குறைவான எண்ணம் எனக்கு ஒரு துளியும் கிடை யாது.

நான்; எளிய ஏழைக் குடியில் பிறந்தவன். கல்லூரியில் நான் படிப்பேனா என்ற ஜோஸ்யம் பார்க்க வேண்டிய நிலையில் இருந் தவன். அதை எல்லாம் மறந்துவிட்டு இன்று வந்தப் பதவியினால் தலை கனத்துப்போய் 50 வருடமாக நான் பயின்ற பண்பாட்டை இழக்கச் சம்மதிக்க மாட்டேன்.

பதவி இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் பண் பாட்டைப் பெறுவது கடினம். பெற முடியாத பண்பாட்டைப் பெற்று; அந்தப் பண்பாட்டை இழக்கும் பேதையாக ஒரு போதும் மாற மாட்டேன்.

—அறிஞர் அண்ணா

---

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (17)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

செட்டிநாட்டு அரசர் இன்று காங்கிரசுக்கு ஒரு செல்லப் பிள்ளையாக இருக்கிறார்! இது காங்கிரசின் வளர்ச்சியையா காட்டும்!! தியாகத் தழும்பேற்ற காங்கிரசார்களைப் பார்த்து, கேலி பேசும் கண்களல்லவா, செட்டி நாட்டரசுக்கு இருந்திடக் காண்கிறோம்! ஆளும்கட்சிக்கு எந்நாளும் ஆதரவாளர் நாங்கள்—முன்பு வெள்ளையன் ஆண்டு வந்தான், வெண்சாமரம் வீசி நின்றோம். இடையே தமிழார்வம் ஓங்கி நின்றது. ஆட்சி தமிழரிடம் வந்து சேரும் போல் தோன்றிற்று உடனே அவர்களோடு குலவினோம். செங்கோட்டையில் கங்கிரஸ் கொடி ஏறிற்று, உடனே எங்கள் கோட்டையிலும் மூவர்ணக் கொடி ஏற்றிவிட்டோம்-எப்போதும் ஆளவந்தாரின் ஆதரவாளர் நாங்கள் என்று தானே செட்டி நாட்டரசரின் புன்னகை பேசுகிறது. இது காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரியாதா!

கொடியைக் கரத்தில் ஏந்திக்கொண்டு, தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று முழக்கமிட்டுக் கொண்டு ப்யூக்கும் செவர்லேயும் இருக்க, தங்கசாலைத் தெருவிலிருந்து. கடற்கரை வரையில் நடந்து வந்தார். இன்றைய செட்டி நாட்டரசர், அன்று குமாரராஜா. நாமாவது அவரை ஓரளவுக்கு வேலை வாங்கினோம்-மணிமாடத்துக்குச் சொந்தக்காரர் அவர், எனினும் மணல்மேடுகளுக்கு இழுத்து வந்தோம்!

3 - 7 - 55 - தம்பிக்கு

எப்பொருளாயினும் அப்பொருளின் மெய்ப்பொருள் கண்டறிதல் வேண்டுமெனக் கூறினார் வள்ளுவப் பெருந்தகை. எனினும். எல்லாப் பொருளிலும் பயனற்ற பகுதியை மட்டும் மெத்தக் கஷ்டப்பட்டுத்தேடிப் பெற்றிடுவோர் உளர்; மிகச்சிறிய எண்ணிக்கையினரும் அல்ல அவர் போன்றார். சுளையின் சுவை அறியாது அதனை வீசி எறிந்துவிட்டுத் தோலினைச் சுவைத்திடுவோரைப் பித்தர் என்கிறோம்; தெளிந்த நீரிருக்கச் சேற்றினிலே புரண்டு மகிழ்ச்சி பெறுவதை எருமை என்கின்றோம்; தழையும் தானியமும் அல்ல சருகாகிப்போன காகிதத்தைத் தின்றுகாலந்தள்ளும் பிராணிகளும் உள்ளன. கேவலம் என்கிறோம். ஆனால், மாந்தரிலேயுமன்றோ உளர். பயனற்ற பகுதியினைப் பாடுபட்டுத் தேடிப்பெற்று, பயனுள்ளப் பகுதியினை இழந்துவிடும் இயல்பினர்!

''தலைமுடி என்ன இவ்வளவு நரைத்து விட்டதே?'' என்ற கேள்வியையா, முதலாவதாக முக்கியமானதாகக் கொள்வது, நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கும் நண்பனைப் பார்த்திடும் போது? அல்லது மிகப்பெரியவர், மிக நல்லவர் என்று கேள்விப்பட்டு ஒருவரைக் காணச் செல்லும் போது? இல்லை என்பாய். ஆனால், தம்பி! அத்தகைய இயல்புள்ளவர்கள் இருக்கின்றார்கள்.

ஆண்டு பலவற்றுக்கு முன்னே ஜனாப் ஜின்னாவைக் காணச் சென்ற என் நண்பரொருவர், அவரைப் பார்த்ததும் கேட்ட முதல் கேள்வி. ''மாதம் எத்தனை ஆயிரம் உங்களுக்கு வருமானம் கிடைக்கிறது. வக்கீல் தொழிலில்'' என்பதாகும். அந்தக் கேள்வி கேட்ட அந்த விநாடியே. என் நண்பரைப்பற்றி மிகக் குறைவான மதிப்புப் போட்டு. அவரிடம் முகம் கொடுத்துப் பேசுவதையும் நிறுத்திக் கொண்டார் ஜனாப் ஜின்னா.

தம்பிக்கு 4 - 7 - 56

......என்னை கோழை என்றோ காட்டிக் கொடுப்பவன் என்றோ, வஞ்சகன் என்றோ, பிஞ்சு, சொத்தை என்றோ, எதைச் சொல்லி என்ன எழுதினாலும் சரி, இயக்கத்திற்கு மட்டும் அதிர்ச்சி தாராமல் இருந்தால் போதும் என்று கருதினேன்.

7.8 55

தம்பி, நான் ஏட்டிலே சந்தித்த துறவியை நாட்டிலே காண விழைகிறேன். உனக்கும் அப்படிதான் தோன்றும். தேடினால் கிடைப்பார்களா என்று எண்ணுவதைவிட, தம்பி நாம் அப்படிப்பட்ட 'துரவிகளாகி விட வேண்டும். குடும்பம் இருக்கும் குடிகெடுக்கும் எண்ணம் இருக்காது. துணைவி இருப்பாள், நமது தொண்டுக்குத் துணைபுரிய. குழந்தைகள் இருக்கும், அன்புக்கான அரிச்சுவடியை உணர்த்த. தொழிலில் ஈடுபடுவோம். வாழ்க்கை நடத்த ஆனால் உடமைகளுக்குக் கட்டுப்பட்டு விடாமல், தன்னலத்துக்கு ஆட்பட்டுவிடாமல், சுகபோகத்திலே வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா, என்று கேட்கும் ஆற்றலையும், அத்தகைய கேட்டினைக் களைந்திட அறபோர்தும் நடத்திறத்தினையும் பெற்று, மடம் தேடாமல், தாவடம் அணிந்த சடம் ஆகாமல், காவி தேடாமல், அதனுள் மறைந்திடும் சாமி ஆகாமல் தொண்டாற்றும் துறவியாக, மோட்சசாம்ராஜ்யத்திலே இடம் பிடிக்க அல்ல. நமது இதயத்திலே அன்புக்கு, இடமளித்து, அற நெறியை நாட்டிலே புகுத்தி, மக்களைப் புதியதோர் இன்பம் பெறச் செய்யும் புனிதத் தொண்டாற்றும் துறவியாக வேண்டும். நாட்டிலே இத்தகைய துறவிகளே இன்று அவசர அவசரமாகத் தேவை. ஏழையின் அழுகுரலை, எளியோரின் கண்ணீரை, பதிகம்பாடியும் மணி அடித்தும்

போக்கிட முடியாது. தம்பி! முடியாது. துறவிகள் வேண்டும். புதிய துறவிகள். வெள்ளை உடை போதும், காவி தேடி அலைய வேண்டாம். காவிகளைத் தான் பார்க்கிறோமே!

— தம்பிக்கு 4-9-55

நாவலர் நெடுஞ்செழியன், இப்போது நமக்கு பொதுச் செயலாளர்

தஞ்சையிலும் மதுரையிலும் நான், பொதுச் செயளாளர் பதவிக்கு வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திய போது புயலே கிளம்பிற்று—எனக்குச் சிறிது சீற்றம் கூடப் பிறந்தது. ஆனால் மெள்ளமெள்ள ஆனால் வெற்றிகரமாகச் சபலத்தைக் கடந்து விட்டோம் கழகம் புதியதோர் கட்டம் வந்து சேர்ந்திருக்கிறது—நாம் வலிவும் பொலிவும் கொண்டதோர் அமைப்புப் பெற்றிருக்கிறோம் என்கிற நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டுவிட்டது பெருமைக்குரிய செய்தி.

தோழர் நெடுஞ்செழியன் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பது இரண்டாண்டுக் காலமாகவே என் உள்ளத்திலே வளர்ந்த வண்ணம் இருந்த எண்ணம்.

ஓராண்டுக்கு முன்பு இலங்கை 'சுதந்திரன்' ஆசிரியர் சென்னை வந்திருந்த போது, அவரிடம் கூறினேன்—அவர் தமது இதழில் வெளியிட்டிருந்தார்.

நான் மட்டுமல்ல, நமது கழகத்திலே பெரும்பாலானவர்கள் புதிய பொதுச் செயலாளராகத் தோழர் நெடுஞ்செழியன்வர வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றனர்.

இந்த எண்ணம் எனக்குத் தோன்றிய நாள்தொட்டு நான் தோழர் நெடுஞ்செழியனை இந்த பொறுப்புக்குப் பக்குவப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு, அவருடைய இல்லத்தை என் இருப்பிடமாக்கிக் கொண்டேன்! சிறிதளவு, என்னிடம் பழகுவதில் கூச்சமுள்ள சுபாவம் அவருக்கு— எனவே, அவருடைய இல்லத்தை இருப்பிடமாக்கிக் கொணடால் தான், என் எண்ணங்கள், நான் சரியென்று கருதும் முறைகள், என் ஆசைகள், எனக்குள்ள அச்சங்கள், இவை பற்றியும், துணைக்கழகங்கள், துளைக்கும் கழகங்கள், தூது விடும் கழகங்கள், வம்புக்கு இழுக்கும் கழகங்கள் ஆகியவை பற்றி என் கருத்து யாது என்பது பற்றியும், உரையாடி உரையாடி எடுத்துக்காட்ட முடியும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, அவர் வீட்டுச் 'சைவத்'தைத் தாங்கிக் கொண்டிருந்தேன்!!

அவரிடம் நேரடியாகக்கூட பிரச்னைகளைப்பற்றிப் பேசுவதில்லை—பிரச்னைகளை நான் மற்ற நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் உடன் இருப்பார்! மிக முக்கியமான கட்டங்களின் போது, புன்னகையாவது பிறக்கும், புருவத்தையாவது நெறிப்பார்! இவ்வண்ணம் இரண்டரண்டுகள். துவக்கத்திலே நான் கொண்ட நம்பிக்கை வளர்ந்து, கனியாகி விட்டது. நமது கழகத்தை அதன் கண்ணியம் கெடாத வகையில் மட்டுமல்ல, வளரும் வகையில், நமது புதிய பொதுச் செயலாளர் நடத்திச் செல்வார், என்ற உறுதியை என்னால் நிச்சயமாக உனைவருக்கும் அளிக்க முடியும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தான் நான் நெடுஞ்செழியனைக் கண்டது.

உங்களில் பலரும் பார்த்திருப்பீர்கள் — நல்லவேளை அவருடைய துணைவியார் கண்டதில்லை என்று எண்ணுகிறேன் — தாடியுடன் நெடுஞ்செழியனை!

அப்போது, தோழர் அன்பழகன் தீவிரமாகக் கட்சிப் பணியற்றி வருபவர் — தோழர் நெடுஞ்செழியன் தானுண்டு தன் படிப்புண்டு என்று இருக்கும் போக்கினராகத் தோற்றமளித்து வந்தார். நான் அப்போது தோழன் அன்பழகன், கல்லூரியிலிருந்து வெளியேறியதும் கழகத்தில் வந்து சேருவார். தோழர் நெடுஞ்செழியன் எங்காவது கல்லூரியில் கம்பனின கவித்திறமை பற்றி (கட்டாயத்தாலும்) இளங்கோ அடிகள் பற்றி (விருப்பத்துடனும்) எடுத்துரைத்துக் கொண்டு, தமிழின் எழிலைக் கண்டும் காட்டியும் பணியாற்றி வருவார் என்றே எண்ணிக்கொண்டேன். அதுபோல நடந்திருக்கக் கூடாதா என்று ஆயாசத்துடன் கேட்கும் அவர் துணைவியார் தெரிகிறார்கள்!! என்ன செய்யலாம்! அவரோ புயலில் குதித்து விட்டார்!!

தம்பிக்கு 8 - 5 - 55

அதிர்ச்சி தரும் அமளிகள், மயிர்க் கூச்செரியத்தக்க கிளர்ச்சிகள், மூக்கின்மீது விரல்வைத்து ஆச்சிரியப்படத் தக்கதான போராட்டங்கள் ஆகியவைகளின் மூலமாகப்பெற கூடிய புதுவலுவைவிட, நாட்டு மக்களிடம், குறிப்பாக இன்னுமும் காங்கிரசிலுள்ள திராவிட மக்களிடம் கொள்கையைப் புகுத்துவதிலே பெறுகிற வெற்றியையே நான் பெரிது விரும்புகிறவன். அப்படிக் கூறுதால் போரே கூடாது என்பவனல்ல; போரில் கலந்து கொள்ளாததன் என்றே போர் வாடை அடிக்கும் போது புதுடில்லிக்கு உத்தியோக வேட்டைக்கு ஓடிவிட்டவனென்ற பொருள் கொள்ளப் பொருப்புள்ளயாரும் துணிமாட்டார்கள் எதையும் துணிவுடன் கூறிடும் போக்கினர் பற்றி நான் பொருட்படுத்தப் போவதில்லை.



JC M24, N92KN N94.1 217216.

காங்கிரஸ்காரர் மனதில், வேதனை, வெறுப்புனர்ச்சி, பகை உணர்ச்சி மூட்டிவிடக்கூடிய வகையிலே கிளர்ச்சிகள் அமைவதை, நான், இன்று அல்ல, எப்போதுமே விரும்பியதில்லை இந்த என் எண்ணத்தை எடுத்துரைக்க என்றும் தயங்கினதுமில்லை.

ஆகஸ்டு முதல் நாள் அய்யா அவர்கள் சொன்னபடி கொடி கொளுத்தப்பட்டிருந்தால், நிச்சயமாக அவரை தூகி கூட அணுகாது; அவரைப் பொருத்தமட்டில் எத்தகையஎதிர்ப்பும் பகையும் துரும்பு. எனவே, அவருக்கு ஒரு சிறு குறைபாடும் ஏற்படாது ஆனால் அன்று. மூண்டிருக்கக்கூடிய பகை உணர்ச்சியும் வெறுப்புணர்ச்சியும் நிச்சயமாக திராவிட இயக்கத்தைப் பல ஆண்டுக் காலத்துக்குப் பழிக்கும் பகைக் கும் உள்ளாக்கிவிட்டிருக்கும். 'பரவாயில்லை' அவர்கள் கூறு வதிலும் நியாயம் இருக்கிறது' என்று சொல்லும் அளவுக்கு நன்மை நெருங்கி வத்து கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள். நாம் கூறும் ஏற்றுக் எதை யும் கொள்ளலாகாது என்ற அளவுக்கு நம்மை விட்டுவிலகிவிடுவார்கள்.

தம்பி, ஒரு கொள்கையை அடிப்படையாக வைத்துப் பணியாற்றும் போது நாளாகவாக எவ்வளவுக்குகெவ்வளவு ஆழமாக அந்தக் கொள்கை ஒரு சிலரிடம் பதிந்து விடுகிறது என்பது மட்டுமல்ல, வெற் றிக்கு வழி, நாளாகவாக எவ்வளவுக்கெவ்வளவு விரிவடைகிறது, பரவு கிறது, மாற்றரை உற்றர் ஆக்குகிறது, என்பதுதான் வெற்றிக்குப் பெறிதும் துணை செய்யும்.

இந்த முறையிலேதான், நான் பலகாலமாகவே, காங்கிரஸ் கட் சியில் இன்று உள்ள திராவிடத் தோழர்களில்—அந்தக் கட்சியாலேயே வாழ்ந்து தீரவேண்டியவர்கள் தவிர—மிகப்பலரை நம்மிடம் கொணடு வந்து சேர்க்கும் வகையான கிளர்ச்சி வேண்டும் என்று கூறிவரு கிறேன்.

கோழைத்தனம் என்கிறார், பெரியார்.

ஏறக்குறையப் பதினைந்து ஆண்டு பயிற்ச்சிக்குப் பிறகும் பெரியா ரிடம்தான் — பார் தம்பி! என்னை விட்டுக் கோழைத்தனம் போக வில்லை என்றால், (பெரியாரே கூறுகிறர்?)

தம்பிக்கு திராவிடநாடு 7. 8. 55

அதே முறையிலேதான், கொடிகளை எரிப்பது, கோட்டைக் கொடி மரத்தை வெட்டிச் சாய்ப்பதும், குத்தீட்டி வீசுவதும் கொல்லும் வேழத்தை ஏவுவதும்-எல்லாம் சம்பவங்கள்-விடுதலைப் போரிலே-பல நாடுகளிலே.

அந்தச் சம்பவங்கள் திட்டமிட்டு நடைபெற்றவை அல்ல.

அந்தச் சம்பவங்களைக் கொண்டு, ஒரு போர்முறை வகுக்கப்படுவதில்லை.

இந்த எண்ணம் எனக்கு மேலிட்டதால்தால், ஆகஸ்டில் நடைபெற இருந்த அந்த காரியம், அவசியமற்ற பகையையும், அணைக்க முடியாத குரோதத்தையும் போக்க மூடியாத பழியையும் உண்டாக்கி விடும் என்று அஞ்சினேன்,

காரணம் எதுவாக வேனும் இருக்கட்டும், அந்தச் சம்பவம் நடைபெறவில்லை கடைசிநேரத்தில், கொடி கொளுத்துவதைப் பெரியார் நிறுத்திக் கொண்டார்.

எனக்குள்ள பிரச்சனை, போதுமான வாக்குறுதி பெற்றுக் கொண்டு நிறுத்தினாரா, இல்லையா என்பதல்ல என் மகிழ்ச்சி கொடி கொளுத்துவது நிறுத்தப்பட்டது என்பதில் தான்.

பெரியாருக்கு இன்று உள்ள பெரும் செல்வாக்கு சாமான்யமானதல்ல அதைக்குறைத்து மதிப்பிடும் கயவனல்ல நான்-காங்கிரலே உள்ளவர்களேயே சில பலருக்கு இன்று செல்வாக்கு இருப்பதை. உதாரணமாகக் காமராஜருக்கு நல்ல செல்வாக்கு இருப்பதை ஒப்புக் கொள்ளும் நான். பெரியாருக்கு உள்ள செல்வாக்கையா குறைத்து மதிப்பிடுவேன், அவருக்கு இன்றுள்ள செல்வாக்கும். அதனை ஈட்டி அவர் ஆற்றியுள்ள அரும்பெரும் பணியும் அபாரம், எதற்கும் அஞ்சுபவரல்ல! எதிர் நீச்சலில் பழகியவர்! கொடி கோட்டை வாசலில் உள்ளதை கொளுத்த வேண்டுமென்றாலும், அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துப்பற்றித் துளியும் கவலைப்பட மாட்டார். அது அவருக்கு சேவையால் கிடைத்தது மட்டுமல்ல, அவருடை சுபாவமே அத்தகையது. அந்தக் நுறுகுறுப்பான கண்களிலேயே நான் பல சமயங்களில் கோபம் கொந்தளிக்கக் கண்டிருக்கிறேன், அடிக்கடி அலட்சியத்தைக் கொட்டக் கண்டிருக்கிறேன், சில வேளைகளில் பிரிவு பச்சாதாபம் தோன்றிடக் கண்டிருக்கிறேன், ஒருபோதும் அந்தக் கண்களிலிருந்து பயம் கிளம்பக் கண்டதில்லை. நானொன்றும், தம்பி, பத்து கெஜத் தொலைவிலே இருந்து அவரைப் பார்த்துப் பூரித்திடும் இரசிகனல்ல, பக்கத்திலேயே பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்தவன்; அவரைப் பலக் கோணங்களிலே இருந்து பார்த்தவன்-பல பிரச்சனைகள் குறித்த அவருடைய பிரத்தியேகக் கருத்துக்களை அறிந்தவன்-'மேஸ்திரி' வேலையல்லவா பார்த்திருக்கிறேன்

எனவேதான், திராவிட இயக்கத்தில் வகுக்கப்படும் போர்த் திட்டம், அவருடைய ஆற்றலை அளவு கோலாகக் கொண்டு மட்டும்

அமையக் கூடாது, எந்தக் கொள்கைக்காக இயக்கம் நடைபெறுகிறதோ, அந்தக் கொள்கைக்குத் தீராப் பகையைத் தேடிப் பெறுவதாக இருத்தல் ஆகாது - பரவலான அளவில் செல்வாக்குப் பெறத்தக்கதும். பகைக் கூடாரத்தில் உள்ளவர்களின் உள்ளத்திலும் பரிவு ஊட்டக் கூடியதுமானதாகத் திட்டம் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். பிரிந்த பிறகு ஏற்பட்ட பித்தமல்ல இது. ஒன்றாக இருந்த நாள்தொட்டு எனக்குள்ள கருத்து.

துளைத்துவிட்டார்! துளைவிட்டார்! என்று இனிப்புப் பண்டத்தைச் சப்பிக்கொண்டு களிப்புக் கூச்சலிடும் சிறார் போல, பெரியார், கடற்கரைக் கூட்டத்திலே தி. மு. க. வையும் குறிப்பாக என்னையும் துளைத்தெடுத்தார் என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார், குத்தும் குணாளர். அவழிக்கு மகிழ்ச்சி கிடைப்பது பற்றி எனக்கு எப்போதுமே அதிருப்தி இருந்ததில்லை.

நான் 'துளைக்கப்பட்டேன்' என்று எந்தக் கடற்கரைப் பேச்சு பற்றி அந்த நண்பர்களிப்படைகிறாரோ, அந்தக் கடற்கரை மணல் அறியும், பெரியார் குறித்து இவர் கொண்டிருந்த கருத்துகளை. பழங் கதை— பழங்கதையாகவே போகட்டும்.

என்னை ஏசட்டும், பரவாயில்லை. — நான் தாங்கிக் கொண்டு பழக்கப்பட்டுவிட்டேன்.

ஆனால் ஆகஸ்ட்டு நடைபெற்றிருந்தால், அதனால் ஏற்படகூடிய பகை உணர்ச்சி, திராவிடர் இயக்கத்துக்கு நிச்சயமாக ஊறு செய்திருக்கும்.

காங்கிரஸ் வட்டாரத்திலே கிளம்பக்கூடிய பகை உணர்ச்சியும்' பொதுமக்கள் மனதிலே கிளம்பக்கூடிய அறுவறுப்பு உணர்ச்சியும், பெரியாரை அசைக்காது!

அவர் அத்தகைய விரோதப் பெருவெள்ளத்தை எதிர்த்து நிற்க வல்லவர்.

---

எகாதிபத்தியம் பழைய நாட்களிலே, அதிகாம் செய்யும்! இந்நாளிலோ வியாபரம் செய்யும்! இது மார்க்ஸ் சூாட்டிய மகத்தான பாடம்.

— அண்ணா

ஆனால், அவர் விருப்புகிற கொள்கைக்காக இருந்து பணி யாற்றும் இயக்கம் இருக்கிறதே, தம்பி திராவிட இயக்கம், அது விரோதப் பெருவெள்ளத்தால் மெத்தப் பாதிக்கப்பட்டுவிடும்.

எனவேதான், கோழை என்றோ காட்டிக்கொடுப்பவன் என்றோ. வஞ்சகன் என்றோ, பிஞ்சு சொத்தை என்றே, எதைச் சொல்லி என்னை ஏசினாலும் பரவாயில்லை, இயக்கத்துக்கு மட்டும், அதிர்ச்சி தராமலி ருந்தால் போதும் என்று கருதினேன்.

பெரியாருக்கு உள்ள அஞ்சாமையும், எதிர்நீச்சுத் தன்மையும், எத்தகைய நிலைமையையும் சமாளிக்கும் திறமையும், எவருடைய விரோதம் குரோதம், பகையாயினும்சரி, எத்தகைய பூசலாயினும்சரி, இவைகளைத் துச்சமென கருதிடும் நெஞ்சழுத்தமும், இயக்கத்தில் நிரம்பி, ததும்பி இருக்கிறது என்று நான் நம்பவில்லை. பெரியாருக் கும் அந்த நம்பிக்கை இல்லாததால் தான், அடிக்கடி அவர் இப்படிப் பட்ட சமயத்தில் என்னையே நம்பி இதிலே ஈடுபடுகிறேன் என்று வெளிப்படையாகவே எடுத்துக் கூறி இருக்கிறார்.

நாம் மேற்கொண்டுள்ள நாட்டு விடுதலை வெற்றிபெறுவதற்கும் இத்தகைய ஒப்பற்ற ஒ தலைவரின் உள்ளத் திண்மை மட்டும் போதாது, மேலும் மேலும் வலுவு பெற்ற வண்ணம் ஒரு கட்டுப் பாடான இயக்கம் வளர்ந்தாக வேண்டும். அந்த வளர்ச்சியை ஆக்ஸ்ட் டுக் கெடுத்துவிட்டிருக்கும் - என்பதனால் தான், நான் அதை விரும்ப வில்லை.

பெரியார், எப்படிப்பட்ட 'வெறுப்பை'க் காங்கிரஸ் வட்டாரம் வெளிப்படுத்தினாலும் தாங்கிக் கொள்ளக் கூடியவர் — இயக்கம் தாங்கிக் கொள்ள முடியாது — இது, தம்பி, அங்கு உள்ள சிலருக்குப் பிடிக்கவில்லை — நான் இதைக் கூறும் போது பெரியாருக்கு நான் ஏதோ ஊறு தேடுவதாகக் கருதுகிறார்கள். அவர்பால் கொண்ட அன்பைக் காட்டிக் கொள்வதற்கு, எளிதான, சுவையுள்ள வழி உன்னையும் என்னையும் ஏசுவது தான் என்று எண்ணிக் கொண்டிருக் கிறார்கள்.

உண்மையில், பெரியாருடைய திறமையையும் அவர் பெற்றுள்ள செல்வாக்கையும் இம்மி அளவும் நான் குறைத்து மதிப்பிடாததால் தான், அவர் தன் நிலைக்குக் தகுந்த திட்டம் தீட்டும் போது, அது முறையல்ல, இயக்கத்தின் இன்றைய நிலைமைக்குத் தக்கபடி யானதும், அதன் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்காத முறையிலும் திட்டம் வேண்டும் என்று கேட்கிறேன் — ஓஹோ! நீ யார் கேட்க, என்பார்கள்!

தம்பிக்கு திராவிடநாடு 7 - 8 - 55

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்—தம்பி! ஆயிரம் முறை கூறு வேன் அல்லவா இதனை! தாங்கிக் கொள்ள பழகிக் கொண்டும் இருக் கிறேன். எனக்கென்று வரும் ஆபத்து துக்கம், இழி மொழி, இன்னல், பழி, இவைகளை! ஆனால் தம்பி! என்னால் மட்டுமல்ல, எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத பேரிடி! நூற்றுக்கணக்கான கிராமங்களை காணோம்! (தஞ்சை மாவட்டத்தில் 1955ம் வருடத்தில் புயல் வீசி விளைவித்த சேதத்தைப் பற்றி எழுதுகிறார்) துயர் துடைக்கச் சென்ற முதலமைச்சரையும் அதிகாரிகளையும், பொது மக்களையும் தொண் டர்களையும் பாராட்டுகின்றோம்.

11.12.155

அண்ணா! சென்ற தடவை தாங்கள் இங்கு வந்திருந்த போது தங் கியிருந்த போது தங்கியிருந்தீர்களே அழகான சோலை அதன் நடுவே அமைந்திருந்த எனது இல்லம் இன்று அவை அழிந்து போய் விட்டன. இந்தப் பகுதியில் நமது தோழர்கள் பெருத்த நஷ்டப்பட்டுப் போயுள்ள னர். என் வேதனை சொல்லுந்தரத்ததல்ல என்று நண்பர் பேராவூரணி அடைக்கலம் எழுதிய கடிதத்தில் என் கண்ணீர் சிந்திற்று. தம்பி!......

......நமது அருமருந்தன்ன நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் மதுரை யம்பதி கடைவீதியில் சென்று கை ஏந்தி நின்று பணமும், பண்டமும் கேட்டுப்பெற்று உதவினார் என்றோர் செய்தி கேட்டு இத்தகு இதயம் படைத்தவரை நண்பராக பெற்றிருக்கிறோமே நமது கழகத்தினராக வும் கொண்டிருக்கிறோமே என்பது எண்ணி பெமைப்படுகிறேன் — பெருமைப்படுகிறேன்.

18.12.1955

அண்ணா! எல்லாம் சரி! பணம் என்றுதானே கேட்கிறாய் பணத் துக்கு என்னடா தம்பி குறை! கள்ளம் கபடமற்ற உள்ளம் படைத்த உன் ஒரு சொட்டு வியர்வை ஓராயிரம் ரூபாய்க்குச் சமமாயிற்றே! இலட்சியத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள உன் சொல் ஒரு சொற்பொழிவல்லவா! உன்னிடம் உள்ள 'திறமை' பயன் பட்டால் போதும் பேடியை நம்பியே தேர்தலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பு நன்மை எதும் செய்துவிடாது!

15 - 7 - 1956

பத்து நாட்களுக்கு முன்பு நான் குன்றக்குடி மடத்துக்குச் சென்றி ருந்தேனே, அங்கு யாரோ எனக்குப் பாடிகாட்டிய பதிகம் போலும் என்று எண்ணிக்கொள்ளாதே தம்பி. அடிகளாரின் அன்பழைப்பை பெற்று மடம் சென்ற எனக்கு சிறந்த உணவு, சுவை மிக்க உரை யாடலுடன் சேர்த்தளிக்கப்பட்டது....

5 - 8 - 1956

ஒரு சமயம் தம்பி நான்நெடுந் தொலைவிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தேன் — திருநெல்வேலி சீமையிலிருந்து... ஒரு குக்கிரா மத்தில் கூத்து நடை பெற்றுக் கொண்டிருந்தது; யாரும் அறியா வண்ணம் ஒரு புறம் இருந்து கொண்டு, கண்டு களித்திடலானேன் நல்லதங்காள் நாடகம்!!

24 - 6 - 1956



217216